# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC .128/2022 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-4/PW- 3 | Village: |
| Name : கார்த்திகேயன் | Age :32 |
| Father's/Husband's Name : நடனசபாபதி | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருப்பனந்தாள் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா1 மற்றும் அசா2 ஐ எனக்கு தெரியும். கடந்த 28.01.2022 ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் எங்கள் தெருவிற்கு அருகில் உள்ள யானை புதைத்த இடம் அருகிலிருந்து சத்தம் கேட்டது. நானும் ரமேஷ் என்பவரும் ஓடி சென்று பார்த்தோம். அங்கு அசா1 பாரதிக்கும் எதிரி ராஜேஷ் என்பவருக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. எதிரி ராஜேஷ் எங்களை பார்த்ததும்

அங்கிருந்து ஓடிவிட்டார். பாரதியிடம் விசாரித்தபோது எதிரி ராஜேஷ் அசா1ன் கையை பிடித்து , இழுத்து அவரது தோளில் கை வைத்து ஆபாச வார்த்தைகளால் பேசி ஆசைக்கு இணங்க மாட்டியா என்று கேட்டதாக பாரதி கூறினார். அதன் பிறகு பாரதியை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம். அதன் பிறகு பாரதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .128/2022 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-2/PW- 2 <br> Name : அன்பழகன் <br> Father's/Husband's Name : கணேசன் <br><br> Nationality : Indian | Village: <br> Age :52 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருப்பனந்தாள் மேலவெளியில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா1 ஐ எனக்கு தெரியும். கடந்த 28.01.2022 ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் எங்கள் தெருவிலிருந்து வாக்கிங் சென்று கொண்டிருந்தேன். அப்போது பழைய சினிமா கொட்டகை தெரு யானை புதைத்த இடம் அருகே சென்று கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. நான் சென்று

பார்த்தபோது அசா1, பாரதி, ரமேஷ், மற்றும் மற்றொரு நபர் நின்று கொண்டிருந்தார்கள். நான் என்ன பிரச்சனை என்று கேட்டபோது எதிரி ராஜேஷ் அசா1 பாரதியை கையை பிடித்து இழுத்து பிரச்சனை செய்ததாக சொன்னார்கள். பிறகு நான் வாக்கிங் சென்றுவிட்டேன். பின்னர் அசா1 அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC .128/2022 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: |
| Name : பாரதி | Age :27 |
| Father's/Husband's Name : சங்கர்கணேஷ் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

( சாட்சி மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க Incamera நடவடிக்கையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)

நான் தற்போது திருப்பனந்தாள் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி சுமார் 2 மாத காலமாக தொடர்ந்து நான் வாக்கிங் செல்லும்போது என்னை பார்த்து தவறான

நோக்கத்தோடு அசிங்கமாக பேசி என்னை அடையும் நோக்கத்தோடு நடந்து கொண்டார். . அப்போது எனது கணவர் வீட்டில் இல்லாததால் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் பயத்தால் மேற்படி விவரத்தை என் கணவரிடம் சொல்லவில்லை. இந்நிலையில் கடந்த 28.01.2022 ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் திருப்பனந்தாளில் உள்ள எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள பைபாஸ் சாலைக்கு வாக்கிங் செல்வதற்காக யானை புதைத்த இடம் அருகே சென்று கொண்டிருந்தபோது எதிரி ராஜேஷ் அங்கு வந்து எனது கையை பிடித்து இழுத்து நான் அணிந்திருந்த சுடிதார் துப்பட்டாவை பிடித்து இழுத்தார். என்னை பார்த்து குச்சிக்காரி, தேவடியா என் ஆசைக்கு இணங்கமாட்டியா, நீ என்ன பத்தினியா என்று அசிங்கமாக திட்டி தவறான முறையில் நடக்க முயற்சித்தார். எதிரி அவ்வாறு பேசியதும் எனக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. பயத்தில் நான் கத்திவிட்டேன். அங்கு நடைபயிற்சி செய்து கொண்டிருந்த அன்பழகன், கார்த்திக் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர் அங்கு வந்துவிட்டார்கள். அவர்கள் வந்து கேட்டு கொண்டிருந்தபோது என்னால் அந்த இடத்தில் நிற்க முடியாமல் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து எனது கணவரிடம் நடந்த விவரத்தை சொன்னேன். உடனே நான் எனது கணவர் மற்றும் பையனுடன் திருப்பனந்தாள் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்ததுதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். ( மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**